பதிவாகிவிட்டது. (குறுக்கீடு) நீங்கள் சொன்ன விதிப்படிதான் நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். நீங்கள் சொன்ன விதிகளைப் பின்பற்றிதான் நான் நடவடிக்கை எடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் வகுத்துக் கொடுத்த விதிகளின்படிதான் நான் நடவடிக்கையினை எடுத்திருக்கிறேனே தவிர, விதியை மீறி நான் நடவடிக்கை எடுக்கவில்லை. இதில் மேற்கொண்டு பேசுவதற்கு ஒன்றும் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. வி.சி. சந்திரகுமார், உட்காருங்கள். (குறுக்கீடு) இதில் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. உட்காருங்கள். நாங்கள் தெளிவாக விளக்கம் சொல்லிவிட்டோம். உங்களுக்கு மதிப்புக் கொடுத்துதான் (குறுக்கீடு) உங்கள் கருத்துகளுக்கு மதிப்புக் கொடுத்துதான், விளக்கமாக, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், நானும் எங்களுடைய சூழ்நிலைகளை, எங்களுக்கிருந்த பிரச்சினைகளை உங்கள் முன்னால் வைத்துவிட்டோம். உட்காருங்கள். (குறுக்கீடு) அவ்வளவுதான் உட்காருங்கள். அதில் ஒன்றும் பிரச்சினை இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, உட்காருங்கள். நான் அடுத்த அலுவலுக்குச் செல்ல வேண்டும். இன்றைக்கு நேரம் இல்லை. (குறுக்கீடு) இன்று மூன்று மானியக் கோரிக்கைகள்மீதான விவாதம் நடைபெற இருக்கிறது. (குறுக்கீடு) இன்று மூன்று மானியக் கோரிக்கைகள்மீதான விவாதம் நடைபெற இருக்கிறது. முனைவர் ஜவாஹிருல்லா, ஒத்துழையுங்கள். நீங்கள் பேசி முடித்துவிட்டீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி, உட்காருங்கள். இதில் வேறு ஒன்றும் இல்லை.

(மனித நேய மக்கள் கட்சி உறுப்பினர்கள் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. அ. அஸ்லம் பாஷா மற்றும் புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.)

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம், மதிப்பீட்டுக் குழுத் தலைவர் அவர்கள்.

2014 ஜூலை 25]

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள ஏழையெளிய மற்றும் நடுத்தர மக்களின் வாழ்வில் ஒளியேற்றியும், (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைதி. அமைதியாக இருங்கள்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: தமிழகத்தின் தார்மீக உரிமைகளைப் பாதுகாத்து, காவேரி மற்றும் முல்லைப் பெரியாறு அணைகளில் தமிழர்களின் உரிமைகளைப் பெறுவதற்கு சட்டபூர்வமான நடவடிக்கை எடுத்து, அதில் வெற்றியும் கண்டு, விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றிய, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலுள்ள கிட்டத்தட்ட ஏழரை கோடி மக்களின் (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைதி, அமைதியாக இருங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: ..நெஞ்சங்களில் நிறைவாக நிறைந்திருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். என்னை சட்டமன்ற மதிப்பீட்டுக் குழுவின் தலைவராக நியமதித்து, இந்த மாபெரும் சட்டமன்றத்தில் அறிக்கையைச் சமர்ப்பிக்க உத்தரவிட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2013-2014 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் பதினொன்றாவது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன், நன்றி.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், அரசு உறுதிமொழிக் குழுத் தலைவர்.

திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணையின் இருப்பிடமே! வெற்றிகளின் பிறப்பிடமே! இறைவன் தந்த எங்கள் இதய தெய்வமே! இந்திய அரசியலின் வழிகாட்டியே! தமிழக மக்களின் ஏற்றமிகு வாழ்க்கைக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க